சிறப்பிதழ்
Special Issue

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

3-4 பங்குனி 2052
16th - 17th March 2021

ISSN : 2321 - 984X

# நவீனத் தமிழாய்வு

*(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)*

*Journal of*

# Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

சிறப்பிதழ் :
தமிழ் உயராய்வுத்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
எளையாம்பாளையம், திருச்செங்கோடு
முதுகலைத் தமிழ்த்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மகளிர்)
வீராச்சிபாளையம், சங்ககிரி

# தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல்

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**
முனைவர் ம. கவிதா
முனைவர் செ. ஜெயந்தி

*Published by*
**RAJA PUBLICATIONS**
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

19 பகுதி-4
Part -4

Scanned by TapScanner

# செம்மொழி இலக்கியங்களில் போர்த் தொழிலாளர் வாழ்வியல்


## ஆ. அமுதா

முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர், விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), எளையாம்பாளையம், திருச்செங்கோடு, தமிழ்நாடு, இந்தியா.

## முனைவர் கு.கருமுருகானந்தராஜன்

உதவிப்பேராசிரியர், பூ.சா.கோ.கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்-641014, தமிழ்நாடு, இந்தியா.



### ஆய்வுச்சுருக்கம்

போர் என்பது இருபெரும் வேந்தரும் அவர்தம் படைகளும் பலவகைக் கருவிகளோடு ஈடுபடும் பெரும் நிகழ்வாகும். அப்பெரு நிகழ்வு பல்வேறு படிநிலைகளைக் கொண்டதாகப் பண்டை இலக்கியங்கள் உணர்த்தி நிற்கின்றன. போர் யாரால்?எதற்காக?எப்படி? எங்கே?நிகழ வேண்டும் என்பதாகிய வரையறைகளுக்கு உட்பட்டுப் பண்டைத் தமிழர்களால் நிகழ்த்தப் பெற்றிருக்கிறது. அவற்றில் தொழிற்பட்ட படைவீரருக்குத் தனித்தன்மை வாய்ந்த வாழ்வியல் இருந்ததா? ஆம் எனில் எங்ஙனம் என்பதை செம்மொழி இலக்கியத் தரவுகளின் வழி ஆராய்வதே "செம் மொழி இலக்கியங்களில் போர்த் தொழிலாளர் வாழ்வியல் என்னும் இக்கட்டுரையாகும்.


### முன்னுரை

செம்மொழி இலக்கியங்களில் புறம் சார்ந்த இலக்கியங்களில் புறம் சார்ந்த இலக்கியங்களான புறநானூறு, பதிற்றுப்பத்து, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை ஆகியவற்றுள் போர் பற்றிய செய்திகள் விரவிக் கிடக்கின்றன. திருக்குறளில் படைமாட்சி, படைச்செருக்கு முதலிய படைப்பண்புகளும் அரசியலில் நிலையான பாதுகாப்பு ஏற்பாடுகளாகிய அரசியல் சூழ்ச்சி,ஒற்றறிதல், தூது, அரண் முதலிய அமைப்புகள் பற்றிய செய்திகளும் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளன. அத்தகு தரவுகளின் வழி பண்டைப்போரில் பங்கேற்ற படைவீரர்களின் தனித்துவம் வாய்ந்த வாழ்வியலை உணரச் செய்வதே இவ்வாய்வுக்கு நோக்கமாக அமைகிறது.

### படைவீரர் பற்றிய சொற்கள்

படைவீரர்களைக் குறிக்கும் எண்ணற்ற சொற்களைச் செம்மொழி இலக்கியப் பரப்பின் வழி அறியமுடிகிறது. அவை ஆடவர், இளைஞர், இளையோர், கடுங்கண், சுற்றம், காளை, கூளியர், சிறுவன் கூளியர், சிறுவன், சினமாந்தர், துணிவினோன், படைகொள் மாக்கள், பெருஞ்செயாளன், பொருநன், மல்லன், மள்ளர், மழவர், மறவர், மீளியாளர், மைந்தர், வயவர், வாளின் வாழ்நர், வாளேருழவன், விடலை, வில் உழுது உண்மார் ஆகியனவாகும்.

இளையோர், காளை, மீளி, விடலை முதலிய சொற்கள் படைவீரர்கள் சிறந்து விளங்கும் வயதினைக் குறிப்பனவாக உள்ளன. இளமை வேகமும் அஞ்சாமையும் உறுதியும் மிக்க இளமைப் பருவமே படைவீரருக்கு ஏற்ற பருவமாகும். அதனை, இளையோர், காளை முதலிய பழந்தமிழ்ச் சொற்கள் புலப்படுத்தி நிற்கின்றன. மறவர், மல்லர், மள்ளர், மழவர், மைந்தர் முதலிய சொற்கள் படை வீரர்களின் பிரிவுகளையும் அவர்தம் உடல்வலிமை, மறப்பண்பு, மான உணர்வு ஆகியவற்றைப் புலப்படுத்துகின்றன

### படை வகைகள்

போரில் வேந்தன் வெற்றி பெறுவதற்கு பண்டைத் படையே அடிப்படையாகும்.



Scanned by TapScanner

தமிழ்வேந்தர்கள் பலதரப்பட்ட படைகளைக் கொண்டிருந்தனர். அவற்றைப் பதினாறாகத் தொகுத்து அமைத்திருந்தனர். அவையாவன

- தினம் பயிற்சி மேற்கொண்டு நெடுங்காலம் நிலைத்து இருக்கும் மூலப்படை
- மானியம், உண்பளம் பெற்று அதன் காரணமாகப் போர் நேர்ந்த காலத்தில் அரசனுக்காகப் போரிடும் உரிமைப்படை
- போர்க்காலத்தில் மட்டும் கூலிக்காகப் பணியாற்றும் கூலிப்படை
- நட்புக் காரணமாகப் போரில் உதவும் துணைப்படை
- அவசர நிலையில் சேர்க்கப்படும் அமயப்படை அல்லது புதுப்படை
- நாட்டுப்பற்றால் ஏற்பட்ட மன எழுச்சி காரணமாக அமையும் வன்படை
- வேடர் முதலிய வனமக்களைக் கொண்ட கானப்படை
- பகைவனை விட்டு வந்து தம்பாற் கூடிய பகைபடு படை
- போர்ப்பயிற்சி கற்ற பயிற்சிப்படை
- போர்ப்பயிற்சி பெறாத உணர்ச்சியுள்ள மைந்தர் குழு கொண்ட பயிற்சியில் படை
- மன்னன் அமைத்தத் தலைவனை உடைய குழுப்படை
- தலைவன் இன்றித் தாமாகவே இயங்கும் தனிப்படை
- அரசனால் வழங்கப்படும் போர்க்கருவிகளைப் பெற்று விளங்கும் பெறுபடை
- தத்தம் போர்க்கருவிகளைக் கொண்டு பொருதும் தற்கருவிப்படை
- காவலனால் தரப்பட்ட வாகனங்களில் ஏறிப் போர் புரியும் ஊர்திப்படை
- தத்தம் வாகனங்களில் ஏறிப் போர் புரியும் தன்னூர்திப்படை

ஆகிய படைகளில் படைவீரர்கள் தம்முயிரைத் துச்சமெனக் கருதிப் போரிட்டதன் விளைவே பெருவேந்தர்களின் வெற்றியாகும்.

### வீரம் என்னும் விழுமியம்

பயிர்களின் விளைச்சலால் கிடைக்கும் பயனை ஏர்க்களத்தில் பெறுதல் போல வீரத்தால் விளையும் பயனைப் போர்க்களத்தில் பெறலாம் என்று பழந்தமிழர் நம்பினர். போர்க்களத்தில் மார்பிலும் முகத்திலும் புண்படுதலை வீரர் தம் பெருமையாகக் கொண்டனர். இதனை வாள்வாய்த்தவடு, இரும்பு சுவைக் கொண்ட விழுப்புண், நெடுந்தகை புண், வாள்வடு விளங்கிய சென்னி, ஒளிறுவாள் விழுப்புண் முதலிய சொற்றொடர்கள் விளக்கி நிற்கின்றன. போரில் பெருவிருப்பும் பகை முனை வெல்லும் நுட்பமும் உடைய முனைஞர்களே படை வீரர்களாகத் திகழ்ந்திருக்கின்றனர். பண்டைச் சமுதாயத்தில் ஒப்பற்ற வீரனுக்கு மட்டுமே நடுகல் எடுக்கப்பட்டது. மேற்கூறிய குறிப்புகள் அக்காலச் சமுதாயத்தில் பெரிதும் மதிக்கப் பெற்ற விழுமியமாக வீரம் இருந்தது என்பதையும் அதனைப் போரில் வெளிப்படுத்தி மகிழ்பவர்களாகப் படைவீரர்கள் இருந்தனர் என்பதையும் உணர்த்துகின்றன.

### படைப்பயிற்சி

வில்லோர் வாழ்க்கைச் சீறூர் வில் உழுது உண்மார், வில்லேர் உழவர் போன்ற படைவீரர்களைக் குறிக்கும் சொற்கள் எப்போதும் பயிற்சியில் ஈடுபடும் படைவீரர்கள் குறித்து விளக்குகின்றன. வேட்டுவர் குடியிலே பிறந்த இளைஞர் விளையாடும் போதே வில்லையும் அம்பையும் கொண்டே விளையாடினர். அச்சிறுவர் வாளால் செய்யப்பட்ட வில், ஊகம்புல்லின் நுண்ணிய கோலின் முனையில் வேலம் முள்ளைச் செருகிச் செய்யப்பட்ட அம்பு ஆகியவற்றைக் கையில் ஏந்தி வேலிக்கடியில் உறையும் காட்டு எலியை அடிக்கக் குறிபார்த்திருப்பர் என்னும் குறிப்பு இளமையிலேயே விற்பயிற்சி இயல்பாகத் தொடங்கப்பட்டதை அறிவிக்கிறது. அவ்வாறு



Scanned by TapScanner

படைவீரர் முதன்முதலாக அம்பு தொடுத்தற்பொருட்டு நிகழும் விழா பூந்தொடை விழா எனப்பட்டது . மேலும் பண்டைத்தமிழர் வாள் பயிற்சிக்கு முருக்கமரக் கம்பத்தினைப் பயன்படுத்தினர் . பன்முறை வாளால் தாக்கப்பட்டும் உருவம் சிதையாமல் நிற்கும் இயல்புடைய முருக்கமரக் கம்பத்தினைப் பயன்படுத்திப் போர்ப்பயிற்சியில் ஈடுபட்டனர் என்பதையும் அறியமுடிகிறது. அப்படைப்பயிற்சியைக் குறிக்க கற்பு என்னும் சொல் ஆளப்பட்டுள்ளது நோக்கத்தக்கது.

### உடை

படைவீரர்கள் அணிந்த உடை மற்றவர்களிடம் இருந்து தனித்துவம் வாய்ந்ததாக இருந்தது. அவர்கள் வெளுத்த ஆடை உடுத்துதலை வழக்கமாகக் கொண்டிருந்தனர். மேலும் நீலக்கச்சை, பூவராடை, பீலிக் கண்ணி முதலியவற்றைத் தரித்திருந்தனர் என்பது "நீலக்கச்சைப் பூவராடைப் பீலிக்கண்ணிப் பெருந்தகை மறவன் என்ற புறநானூற்றுத் தொடர்கள் வழி உறுதியாகிறது.

### தற்காப்பு ஆடை

கவசம் என்பது படைவீரர்கள் உடலில் அணியப்படுவதாகும். மெய்புதை அரணம் என்று அதனை வழங்கினர். "புலிநிறக்கவசம் மழையென மருளும் பற்றோல், மழை உருவின் தோல், தோல் கழியோடு பிடி செறிப்பவும் மை அணிந்து அழுதரு மா இரும்பல் தோல், விளங்கு பொன்னெறிந்த நலங்கினர் பலகை, வடிமணிப்பலகை, கழிப்பிணிப் பலகை, பூழியர் மெய்மறை, இடுகு நிரைத்து மிடைத்தோல், புரைத்தோல் ஆகிய இலக்கியத் தொடர்கள் தற்காப்பு ஆடைகளை வீரர்கள் அணிந்திருந்தனர் என்பதற்குச் சான்றுகள் ஆகின்றன.

### முழுக்காலணி

படைவீரர்கள் அடிமுழுவதும் மறையுமாறு அணியும் காலணி தரித்திருந்தனர். அதற்கு அடிபுதை அரணம் என்று பெயரிட்டுள்ளனர்.

### கழல்

படை வீரர்களின் இன்றியமையாத அணிகலனாகக் கழல் விளங்கியது. அக்கழல் அழகானதாகவும் வேலைப்பாடு உடையனவாகவும் செய்யப்படும் என்பது "ஒண்பொறிக் கழற்கால் என்னும் பதிற்றுப்பத்தின் தொடரால் அறியமுடிகிறது. கழல் உராய்ந்து கணுக்கால் காழ்ப்பேறியதால் வீரனின் பாதங்கள் உறுதிப்பட்டன. அவ்வாறு உறுதியும் அழகும் பெற்றிருந்த கால் "பரேர் எறுழ்க்கழற்கால்" எனப்பட்டது.

### நம்பிக்கைகள்

போரில் ஈடுபடும் வேந்தர்க்கும் படைவீரர்களுக்கும் போர் தொடர்பான சில நம்பிக்கைகள் அருந்தன. அவை விரிச்சி கேட்டல், உன்னம் பார்த்தல் ஆகியனவாகும். போருக்குப் புறப்படும் முன் நறிய பூக்களை நெல்லுடன் தூவிக் கைத்தொழுது வணங்கி விரிச்சி கேட்டு நிற்பர்.

"நென்னீரெறிந்து விரிச்சி போர்க்கும்
செம்முது பெண்டின் சொல்"

என்ற புறப்பாட்டு அடிகள் விரிச்சி கேட்கும் நிலையினைப் புகலும். நல் நிமித்தம் பார்த்துப் படைக்கலங்களை எடுக்கும் படைவீரரை

"குடபுலமருங்கின் உய்ம்மார் புள்ளோர்த்துப்
படையமைத் தெழுந்த பெருஞ்சொல் ஆடவர்"

என அகநானூறு காட்டுகிறது.

### தொடர்பு கொள்ளல்

போர்க் காலங்களில் போர்முரசு, பறை, சங்கொலி மூலம் படை வீரர்களுக்குள் செய்திப் பரிமாற்றம் நிகழ்ந்திருக்கிறது.

சூடியிருந்த பூக்களும் அவர்கள் யார் அவர்களின் நோக்கம் போன்றவற்றுக்கு அடையாளங்களாக அமைந்திருந்தன.

### படைக்கல மேலாண்மை

படைவீரர்கள் படைக்கருவிகளைப் பயன்படுத்துவதிலும் பாதுகாப்பதிலும் சிறந்த



Scanned by TapScanner

அறிவைப் பெற்றிருந்தனர். தொலை இலக்கு கருவிகள், இடை அண்மை இலக்கு கருவிகள், அணுக்கப் போர்க்கருவிகள் எனப் படைக்கருவிகள் பாகுபடுத்தப் பெற்றிருக்கின்றன. அவற்றை எங்ஙனம்? எப்போது பயன்படுத்த வேண்டும் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர்.

போரில்லாத காலங்களில் படைக்கருவிகளைப் பாதுகாப்பான இடத்தில் வைத்திருந்தனர். அங்கு வைக்கப்பட்டிருந்த படைக்கலன்கள் செப்பம் செய்யப்பட்டு நெய் பூசப்பட்டு பீலி அணிந்து மாலை சூட்டப்பட்டு இருந்தன.

## முடிவுரை

செம்மொழி இலக்கியங்களில் பண்டைப் போர்த் தொழிலாளர்களான படை வீரர்களின் வாழ்வியலை உணரும் வகையிலான குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. அக்குறிப்புகளின் வழி அவர்களின் போர்ச் செயல்பாடுகள், விழாக்கள், நம்பிக்கைகள், உடைகள், பயிற்சிகள், விழுமிய வாழ்வு, தொழில் அறிவு ஆகிய செய்திகள் அறியக் கிடைக்கின்றன.

## தொகுப்புரை

1. படை வீரர்கள் போர்த் தொழிலாளர்களாகக் கருதத்தக்கவர்கள் ஆவர்.
2. படைவீரரைக் குறிக்கும் சொற்கள் அவர்களின் உடல் வலிமை, மறப்பண்பு, மான உணர்வு ஆகியவற்றைப் புலப்படுத்துகின்றன.
3. படைகளின் வகை தொகைகள் படைவீரர்களின் பல்வகைச் செயல்திறத்தை உணர்த்துகின்றன.
4. வீரம் என்னும் விழுமிய உணர்வே படைவீரர்களின் வாழ்வியலை இயக்கியிருக்கிறது.
5. போர்ப்பயிற்சியை இளம் பருவத்திலேயே முறையாகப் பெற்று வரும் ஏற்பாடு அவர்தம் வாழ்வில் இருந்தது.
6. பூந்தொடை விழா என்பது படைவீரர் வாழ்வியலின் தனித்துவமான விழாவாகும்.
7. போர்த்தொழிலாளர்களான படை வீரர்களுக்கென்று தனியான எடை பயன்படுத்தப்பெற்றுள்ளது.
8. முழுக் காலணி அணியும் வழக்கம் அவர்களிடம் காணப்பட்டது.
9. கழல் அவர்களுக்கான அணிகலனாகப் போற்றப் பெற்றிருக்கிறது.
10. விரிச்சி, உன்னம் போன்ற போர் தொடர்பான நம்பிக்கைகள் சிரத்தையுடன் கடைப்பிடிக்கப் பெற்றுள்ளது.
11. படைக்கருவிகளைச் செய்யவும், பயன்படுத்தவும் பாதுகாக்கவுமான தொழில் அறிவைப் படைவீரர்கள் பெற்றிருந்தனர்.

## அடிக்குறிப்புகள்

1. கி.பாண்டுரங்கன், தொல்காப்பியம் காட்டும் போரியல் (கட்), பண்டைத்தமிழர் போரியல் வாழ்க்கையும் தற்காலப் போர் நடவடிக்கையும், பக்.140-147, வெற்றிவேல் வெளியீடு, 1986
2. டாக்டர். தங்கம் கந்தசாமி, போரியல் அன்றும் இன்றும், சென்னைப் பல்கலைக்கழகம், 1982
3. புறநானூறு, 93:15, 180:4, 281:9
4. புறநானூறு, 20
5. அகநானூறு, 187:7-9, கழக வெளியீடு, சென்னை, 1970
6. புறநானூறு 4 : 6, 26: 22-23
7. புறநானூறு 15: 2
8. புறநானூறு 7: 2
9. பட்டினப்பாலை,294
10. புறம் 95: 3

௸



Scanned by TapScanner